திரு. எஸ். முருகையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நண்பர் திரு. கணபதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

7. நடைமுறைக் கேள்வி.

ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன் மொழியும் நாளன்று அதற்கான திருத்தங்களையும் முன்மொழிய அனுமதிப்பதுகுறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order, the practice in this House is to move the Motion of Thanks and then we move the amendments later. During the last two or three years, there has been great inconvenience for the Opposition Members in that all our amendments are clubbed together and then they are placed on the table of the House on the last day or last but one day of the discussion. When the Motion of Thanks is before the House, the amendments also must be before the House so that the Members can discuss both the Motion of Thanks and the amendments simultaneously. In one particular year I succeeded in having the amendment moved on the second day of the discussion on the Governor's Address. That was when the Minister for Co-operation, Thiru Aditanar, was the Speaker. On 13th February 1968 when my Party Member, Thiru Krishnaswami Gounder, started making his speech, I brought forward an amendment which was allowed to be placed before the House on the second day of the discussion on the Governor's Address. Now I have given notice of an amendment and if the Deputy Speaker permits, I will move it now itself. I have taken care to see that no unparliamentary word is used there. So I request that I may be permitted to move my amendment now.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I also want to refer to one matter. For Demands for Grants we give notice of cut motions and they are all printed and placed on the table of the House but that is not followed in the case of the Governor's Address and so the Members of the Opposition are at a great disadvantage. Therefore, I suggest that the amendments that we have given notice of should be printed and placed on the table of the House so that the House may be benefited by the amendments

given notice of by Members. I have also got three amendments. So, I suggest that the Chair can fix a time-limit for giving notice of amendments.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்கள் கட்சி சார்பாகவும் நாங்கள் இதிலே ஏற்கனவே சில அமெண்ட்மெண்ட்ஸ் கொடுத்திருக்கிறோம். அதை பார்மலாக மூவ் பண்ணுவதற்கு முடியாவிட்டாலும் அதை சர்க்குலேட் செய்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Even in the case of Bills, we give notice of amendments and at the time of the consideration of the Bills, both the Bills and the amendments are before the House. It would also be advantageous to the Members of the ruling party who can speak on them also.

MR. DEPUTY SPEAKER : I must thank Dr. Hande for quoting certain precedents. But it cannot be done all of a sudden. These amendments must be scrutinised first. So I fix up the time as 1 O' Clock today. Before 1 O' Clock today, the amendments should be submitted and tomorrow, when we meet they will be circulated.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம் —தொடர்ச்சி.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை யேற்று ஆறாண்டுக் காலம் முடிந்து இன்றைய தினம் ஏழாவது ஆண்டிலே அடி வைக்கிறது. மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் நம்முடைய சட்டப்பேரவை, சட்ட மேலவை ஆக இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கைகளையும், அது எதிர்காலத்தில் உருவாக்க இருக்கின்ற நல்ல திட்டங்களையும், மக்களுக்குச் செய்யக்கூடிய நல்ல நன்மைகளையும் மிகத் தெளிவாகத் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதன்முதலாக, நம்முடைய தமிழ்நாட்டின் தேசியச் சின்னமாகக் கருதப்பட்டு வந்த திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவிற்காகத் தன்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.